| | | | | | |
|---|---|---|---|---|---|
| **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
| மாவட்டம் : | **தேனி** | காலம் : | **15/06/2024** | முதல் | **19/06/2024** |
| அறிக்கை எண் : | **048/ 2024** | வெளியீட்டு நாள் : | **14/06/2024** | | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 38°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| **கடந்தவார வானிலை** (09.06.2024**முதல்** 13.06.2024) | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 19-06-22024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 09/06 | 10/06 | 11/06 | 12/06 | 13/06 | **தேதி** | **நாள்-1** 15/06 | **நாள்-2** 16/06 | **நாள்-3** 17/06 | **நாள்-4** 18/06 | **நாள்-5** 19/06 |
| 5.0 | 2.3 | 0.5 | 0.4 | 0.3 | மழை (மி.மீ) | 0 | 1 | 0 | 6 | 2 |
| 35 | 37 | 39 | 38 | 39 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 33 | 33 | 33 | 32 | 32 |
| 25 | 26 | 27 | 27 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 23 | 23 | 22 | 22 | 21 |
| 4 | 3 | 4 | 7 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 7 | 7 | 6 | 7 |
| 78 | 66 | 64 | 76 | 69 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 80 | 70 | 80 | 80 |
| 53 | 54 | 48 | 57 | 46 | | 50 | 50 | 40 | 50 | 50 |
| 10 | 7 | 9 | 5 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 12 | 12 | 10 | 12 | 12 |
| மேற்கு | வட மேற்கு | மேற்கு | மேற்கு | வட மேற்கு | காற்றின் திசை | **மேற்கு** | **மேற்கு** | **மேற்கு** | **மேற்கு** | **மேற்கு** |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூன் 18 மற்றும் 19 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 32°-33° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 21°-23° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 10 முதல் 12 கி.மீ வேகத்தில், மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

### அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (14 - 27 ஜூன் 2024):

### மழைப்பொழிவு :

14-06-2024 - 20-06-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பை ஒட்டியே மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

21-06-2024 - 27-06-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

### அதிகபட்ச வெப்பநிலை :

ஒட்டியே காணப்படும். 28° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

21-06-2024 - 27-6-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 28° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

14-06-2024 - 20-6-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

21-06-2024 - 27-6-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 24° செல்சியஸ் முதல் 28° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : மல்லிகை, வெண்டை, கால்நடை.**

**மல்லிகை:**

மல்லிகை பூப் பயிரில் ஆங்காங்கே ஊட்டசத்து குறைபாடு காணப்படுகிறது. மல்லிகை மலர்த் தோட்டங்களில் நன்கு மக்கிய தொழு உரம் இடுவது நல்ல பலனைக் கொடுக்கும்.

நடவு செய்வதற்கு முன் குழி ஒன்றிற்கு 10கிலோ மக்கிய தொழு உரத்தினை இட வேண்டும். மேலும் ஆண்டு ஒன்றிற்கு ஒரு மல்லிகைச் செடிக்கு 60 கிராம் தழைச்சத்து, 120கிராம் மணிச்சத்து மற்றும் 120கிராம் சாம்பல் சத்து ஆகியவற்றை கொடுக்கக்கூடிய உரங்களை இரு பகுதிகளாகப் பிரித்து நன்கு மக்கிய தொழுவுரத்துடன் கலந்து, ஜூன்-ஜூலை மாதத்தில் ஒரு முறையும் பின்பு நவம்பர் மாத வாக்கில் கவாத்து செய்தவுடன் மறு முறையும் செடியினைச் சுற்றி மண்ணோடு நன்கு கலக்கும் படி இட வேண்டும்.

**வெண்டை:**

தற்போது நிலவும் பருவச்சூழ்நிலையில் வெண்டை பயிரில் இலை வழி ஊட்டம் தெளித்தல் மிகவும் நல்லது.

ஒரு சதவிகித யூரியா கரைசலை விதைத்து 30 நாட்கள் கழித்து 10 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை தெளிக்க வேண்டும். 17 கிராம் மீயூரேட்ஆப் பொட்டாஷ் ஒரு லிட்டர் நீரில் கரைத்து விதைத்த 30, 45 மற்றும் 60வது நாளில் தெளிப்பதன் மூலம், விளைச்சலை அதிகப்படுத்தலாம்.

வீரிய ஒட்டு ரகங்களுக்கு தண்ணீரில் கரையக் கூடிய 5 சதவீத 19-19-19 உரத்தினை நடவு செய்த 30ம் நாளில் இருந்து 10 நாட்கள் இடைவெளியில் 3 முறை தெளிக்க வேண்டும்.

**கால்நடை:**

கால் நடைவளர்க்கும் விவசாயிகளின் கவனத்திற்கு இந்த தருணங்களில் தங்களின் மாடுகளை கோமாரி எனும் கால்கானை வாய்க்கானை நோய் தாக்குவதற்கான வாய்ப்பு உள்ளது. இதன் காரணமாக பெரும் பொருளாதார சேதாரம் ஏற்பட வாய்ப்பு உள்ளது

மாடுகளுக்கு கோமாரி எனப்படும் கால்கானை வாய்க்கானை நோய்க்கான தடுப்பூசியினை போட்டுக் கொள்ள வேண்டும்.

மேலும் நான்கு மாதத்திற்கு ஒரு முறை கோமாரி நோய்த் தடுப்பூசியை தவறாமல் போட வேண்டும்.